
# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
## நாமக்கல் மாவட்டம்

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், வகுரம்பட்டி கிராமம் நில அளவை எண். 23/6-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனை பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

| | |
|---|---|
| அளவு :- 1:400 (அ) 1"=33'0" | இணையவழி விண்ணப்ப எண் : **ZOORJQDA** |




<u>குறிப்பு:-</u>

வ

1. மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.24 ஏக்கர் (அ) 980.00 ச.மீ
2. உத்தேச சாலை பரப்பு : 303.33 ச.மீ
3. மனைப்பிரிவின் எல்லை :
4. நிலையிலுள்ள சாலை :

<u>பொது ஒதுக்கீடு :</u>

<u>உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :-</u>

உத்தேச சாலை பரப்பு : 303.33 ச.மீ

மனைப்பிரிவு சாலை பரப்பளவு நீங்கலாக மனைகளின் பரப்பளவு = (மனைப்பிரிவின் மொத்த பரப்பு - உத்தேச சாலை பரப்பு)

(980.0 ச.மீ -303.33 ச.மீ) = 676.67 ச.மீ

<u>பொது உபயோகம் (TNCDBR 47 (8)-ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட பரப்பு)</u>

1. உள்ளாட்சிக்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு : 3.72 ச.மீ (0.55%)
2. TANGEDCO க்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு : 3.72 ச.மீ (0.55%)

அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017-ன் கீழ் வரன்முறைப்படுத்தி ம.வ/ம.(சே) எண் 1187/2018, வரன்முறை மனைப்பிரிவு எண் 1030/2018 என எண்ணிடப்பட்டு உள்ள மனைப்பிரிவில் திறவெளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>மூலை முடுக்கு:-</u>

12.0.மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.50மீ. x 1.50மீ. விடப்படல் வேண்டும்.

<u>நிபந்தனைகள்:</u>

1. அரசாணை எண் -18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குழநீர் வடிகால் துறை (MA-1) நாள் 04.02.2019 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
2. அரசாணை எண் -16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குழநீர் வடிகால் துறை (MA-1) நாள் 31.01.2020 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண். 181, படி ஊ.வ (ம) நகர்புற வளர்ச்சித் துறை 09.12.2020 -ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத்துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், உள்ளாட்சி உறுதி செய்ய வெண்டும்.
5. நிலஉரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால், மனைப்பிரிவிற்க்கு தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதெனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூல்நிலை ஏற்படின் இம் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர்-ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யயும் பொது இவ்வாணையின் நகலொடு நகர்-ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலையயும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில் நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பெயரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி - திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பாக விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம். குத்தகை பத்திரம். பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமெ சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வெறு யாரெனும் தனி நபர் உரிமைக் கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. நீர் நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடங்கள் கட்டப்பட வெண்டும்.
9. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை எவ்வித மாற்றமும். விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6"x4" அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
10. நீதிமன்ற வழக்குகள் ஏதெனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல.
11. இம்மனைப்பிரிவிலிருந்து அருகில் உள்ள இடத்திற்கு செல்லவும் வரைபடத்தில்காண்பிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு சாலைகளின் குறுக்கே மனைப்பிரிவு சாலையின் போக்கினை பாதிக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டிருப்பின் அதனை அகற்றப்பட வேண்டும்.
12. உத்தெச மனைப்பிரிவு சாலைகளுக்கு மனுதாரரால் தார் சாலை அமைக்கப்பட்டு (EO/UE) செயல் அலுவலர், யூனியன் பொறியாளர் அவர்களிடம் தரம் குறித்து தகுதிச்சான்று பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
13. உத்தேச மனைப்பிரிவின் உள்ளே LT Line, HT Line ஆகியன செல்லுமானால் அவைகளை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கபபட வேண்டும்.
14. அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017-ன் கீழ் வரன்முறைப்படுத்தி ம.வ/ம.(சே) எண் 1187/2018, வரன்முறை மனைப்பிரிவு எண் 1030/2018 என எண்ணிடப்பட்டு உள்ள மனைப்பிரிவில் திறவெளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**SWP / DTCP / NAMAKKAL / LAYOUT NO: 270/2024**

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Namakkal
Date:2024.10.26 10:01:06

உதவி இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.